## கல்லூரியைப் பற்றி...

மதிப்பிற்குரிய நிறுவனர் பத்மபூஷண் ஸ்ரீ. என். ராமஸ்வாமி ஐயர் அவர்களால் 1951 ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற சீதாலஷ்மி ராமஸ்வாமி கல்லூரி 2026 ஆம் ஆண்டு பவள விழாவில் அடியெடுத்து வைத்திருக்கும் மகளிர்க்கான பெருமை மிகு கல்வி நிறுவனமாகும். தந்தை வழியில் கல்விச் சேவையினைப் புரிந்து வரும் அறப்பணிச் செம்மல் திரு. ரா. பஞ்சாபகேசன் அவர்களின் பணி போற்றுதற்குரியது. பெண்கல்வி ஒன்றே சமுதாயத்தை முன்னேற்றும் என்பதை உணர்ந்த தகப்பனாரின் கல்விப் பணியினை தொலைநோக்குப் பார்வையோடு நிர்வாக இயக்குநர் திரு. ரமணி பஞ்சாபகேசன் அவர்களும் மற்றும் கல்வி இயக்குநர் முனைவர் திரு. கண்ணன்பஞ்சாபகேன் அவர்களும் திறம்படச் செயலாற்றி வருகின்றனர்.

1951 - ஆம் ஆண்டு பெண் கல்வியானது சமூகத்தில் பின் தங்கியிருந்த காலக்கட்டத்தில் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் உன்னத நோக்கத்துடன் ஸ்ரீ. என். ராமஸ்வாமி ஐயர் அவர்கள் உருவாக்கிய கல்வி வளாகத்தின் ஓர் அங்கமான சீதாலஷ்மி ராமஸ்வாமி கல்லூரி திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு 1987-ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி நிலையை அடைந்தது. NAAC – இன் A+ தரத்துடன் (4 – ஆவது சுழற்சி) அங்கீகாரம் பெற்றது. இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரக் கட்டமைப்புடன் ஒவ்வொரு ஆண்டும் 4000-த்திற்கும் மேற்பட்ட மாணவியர் கல்வி கற்கிறார்கள். தற்போதைய மத்திய அரசின் நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு ஸ்ரீமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் இக்கல்லூரியில் 1977-1980 வரையிலும் தனது இளநிலை பொருளாதாரப் பட்டப்படிப்பைப் பயின்றவர். இவர் எங்கள் முன்னாள் மாணவி என்பதைப் பதிவு செய்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

## சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையினைப் பற்றி .......

· சீதாலஷ்மி ராமஸ்வாமி கல்லூரி சுயநிதிப்பிரிவில் 1981 -ஆம் ஆண்டு தமிழ்த்துறை தொடங்கப்பட்டது. அறிவியல் மற்றும் கலைத்துறைப் பாடங்களில் தமிழ் மொழி பகுதிப்பாடமாக வைக்கப்பட்டது. தற்பொழுது தமிழையும், புதிய படைப்புகளையும் உருவாக்கும் நோக்கில் மாணவிகளுக்கான கவிதை, கட்டுரை, நாடகம் போட்டிகள் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் நடைபெறவுள்ளது.

## விழாவின் நோக்கம்

தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு மற்றும் IIC இணைந்து நடத்தும் முக்கனிச் சாரல் விழா, செய்யுள் ஓசையில் இயல்தமிழையும், இயற்கையோடு மிதந்து வரும் இசைத்தமிழையும், நடனமாடி வரும் நாடகத் தமிழையும் மையமாகக் கொண்டு தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு சார்பில் பல்வேறு போட்டிகள் தேசிய அளவில் நடைபெற உள்ளன. அனைத்துக் கல்லூரி மாணவிகளும் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

## இயல் தமிழுக்கான போட்டிகள் :

1. கட்டுரை போட்டி
2. கவிதை போட்டி
3. ஓவியப்போட்டி

## இசைத் தமிழுக்கான போட்டி:

Ø பக்தி இலக்கிய பாடல்கள் ஒப்புவித்தல்

## நாடகத் தமிழுக்கான போட்டி:

Ø மௌன மொழி நாடகம்

ஆகிய போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. அதற்கான களமாக மூன்று போட்டிகளை முக்கனிச் சாரல் என்ற பொருண்மையில் தேசிய அளவில் கல்லூரி மாணவிகளுக்கிடையேயான போட்டிகள் 24.09.2025 ஆம் தேதி அன்று நிகழ்த்த இருக்கின்றோம். எனவே தங்களின் கலை ஆர்வத்தையும் தமிழ்ப்பற்றையும் வருங்கால இளந்தலைமுறையினருக்கு உணர்த்தி சிறப்பித்துத் தர வேண்டுகிறோம்.

சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி
(தன்னாட்சி)
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
திருச்சிராப்பள்ளி
*Accredited with A+ by NAAC (4th Cycle)*

INSTITUTION'S INNOVATION COUNCIL
(Ministry of HRD Initiative)

# தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு மற்றும் IIC இணைந்து நடத்தும் முக்கனிச் சாரல் விழா




நேரம்: காலை 10.00 மணி

நாள்: 24.09.2025

இடம்: பகவதி அரங்கம்

3 GOOD HEALTH AND WELL-BEING

1951 Platinum Jubilee 2026

4 QUALITY EDUCATION

## போட்டிக்கான களங்கள்

### உன் எண்ணத்திற்கு உயிர்கொடு (கவிதை)

· 20 வரிகளுக்குள் இருத்தல் வேண்டும்.
· கால அளவு – ஒரு மணி நேரம்

### சொற்களை வளமாக்குவோம் (கட்டுரை )

· மூன்று பக்க அளவில் இருத்தல் வேண்டும்.
· கருத்து, கையெழுத்து, தெளிவுடன் மேற்கோள் இருத்தல் வேண்டும்
· கால அளவு – ஒரு மணி நேரம்

### உங்களுள் யார் கண்ணுள் வினைஞர் (ஓவியம்)

தலைப்பு : இலக்கியக் காட்சிகள் (அகம் , புறம்)
· கால அளவு – ஒரு மணி நேரம்

### இறைக்கு இசை வடிப்போம் (ஒப்புவித்தல்)

· கால அளவு - 8 - 10 நிமிடங்கள்

### கண்களால் கதைப்போமா (மௌன மொழி நாடகம்)

· கால அளவு - 8 - 10 நிமிடங்கள்

## போட்டியாளர்களுக்கான விதிமுறைகள்:-

o பிற கல்லூரியிலிருந்து மாணவிகள் மட்டும் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
o அனைத்துத்துறை மாணவிகளும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
o போட்டியாளர்களுக்கான பதிவுக்கட்டணம் ஒரு போட்டிக்கு - 50 ரூபாய்.
o போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் ரூ. 50 செலுத்த வேண்டும். ஒருவர் மூன்று போட்டிகளிலும் பங்கேற்கலாம்.
o போட்டியாளர்கள் அனைவருக்கும் மின்சான்றிதழ் வழங்கப்படும்.
o போட்டிக்கான உபகரணங்கள் அனைத்தும் தாங்களே எடுத்து வர வேண்டும்.




## ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் கா.காமாட்சி
அலைப்பேசி : 9943166399
திருமதி க. சமயேஸ்வரி
அலைப்பேசி : 9566412344
திருமதி மெ.பேபிநிஷாந்தினி
அலைப்பேசி : 8778177411

## புலனக்குழுவில் இணைவதற்கான இணைப்பு

https://chat.whatsapp.com/ChS09340VDk7ji56PQ0hOr

## பதிவுப் படிவத்திற்கான இணைப்பு

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSecZ_x1GXFIFpA5h9rBWfoq0Xq5WoS4y7aYxEEZlK_BQ0llYQ/viewform?usp=dialog

முயற்சி! பயிற்சி! வெற்றி!